# குதம்பைச் சித்தர் பேசும் விழிப்புணர்வு சிந்தனைகள்

**முனைவர் கே. இரா. கமலாமுருகன்**

**இணைப் பேராசிரியர், உயர் தமிழாய்வு மையம்**

**இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி)**

46

**மின்னஞ்சல் : kamalamurugan_tamil@queenmaryscollege.edu.in**

ORCID ID : JTTPS://ORCID.ORG000-002-0215-6855

**ஆய்வுச் சுருக்கம்**

"சித்தன்போக்கு சிவன் போக்கு" என்பதனை உணர்த்தியவர்கள் சித்தர்கள். சித்தர்கள் தன் உடல் தொடர்பான ஆசைகளை நீக்கி உயிர்வாழ இயற்கைப் போதுமானது என்பதனை உணர்ந்து உரைத்தவர்கள். அவற்றுள் சிற்சில சிந்தனைகளை மட்டுமே வெளிப்படுத்தி வாழ்வில் வெற்றிகொள்ள பயன்படும் வகையில் குதம்பைச் சித்தரின் வாக்கில் சில விழிப்புணர்வுச் சிந்தனைகள் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

உலகிலேயே பக்தி மொழியாகத் தமிழ் மொழியே அடையாளம் காணப்படுகின்றது. காரணம் மிக அதிகமான பக்தி இலக்கியங்கள் பண்பாட்டின் பாதையின் மூலம் பண்பட்ட வாழ்வினை வாழ வழிகாட்டுவனமாக அமைந்துள்ளமையே ஆகும். அவ்வகையில் கிடைத்துள்ள சிறப்ன பக்தி இலக்கியங்களினுள்ளும் சித்தர் இலக்கியங்கள் சிறப்பான தனித்த இடத்தினை வகிக்கின்றன. அவ்வரிசையில் குதம்பைச் சித்தர் பேசும் விழிப்புணர்வு சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சித்தர்கள்**

பக்தி இலக்கியத்தில் இணைந்தவர்களாக அடையாளப் படுத்தப்பட்டாலும் சித்தர்களின் வழிபாட்டு முறைகளும் கொள்கை வெளிப்பாடுகளும் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டிருந்தன என்பதுவே சிறப்பு.

'சித்' – என்றால் அறிவு. எனவே சித்தம் என்று வந்தது. அவ்வகையில் 'அறிவினை விரிவு செய் அகண்டமாக்கு என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ற வகையில் சித்தர்களின் வாழ்வியல் அமைந்துள்ளது. சிவனையே சித்தன் என்று கூறும் மரபினை நம் அடியவர்கள் பதிவு செய்துள்ளனர்.

திருநாவுக்கரசர் சிவனைச் சித்தன் என்று பதிவு செய்துள்ளார். 'தம் திருவீழிமிழலைப் பதிகத்தினுள் (தேவாரம்)

"சித்தர்கள் எனப்படுவர் யோகத்தில் திறனால் பல புதுமைகளைச்

செய்தவர்களே ஆவர்"

(ந.சி. கந்தையாப்பிள்ளை – தமிழ் இந்தியா-பக்.204)

என்ற கூற்றும்,

“சமயங்களுக்கும் அதை விதிக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் சித்தர்கள் கட்டுப்பட்டவர்கள் அல்லர். அனைத்து உயிர்களிலும் ஒன்றாகிய இறைவனைக் கண்டவர்கள் சமுதாயம் திருந்த வேண்டும் என்று விழுமிய நோக்குடன் சாதி மத சடங்கு முதலியவற்றைக் கண்டித்தவர்கள்” (இரா. மாணிக்கவாசகம் – திருமந்திர ஆராய்ச்சி – பக்.26)

என்று கூறுகின்றார்.

“உடம்பாகிய மெய் அழியாமல் வைத்துக் காப்பாற்றுக் கூடியது என்பதுதான் சித்தர்களின் கொள்கை. உண்மையானது உடம்பு என்ற பொருளை மெய் என்று சொல்வது பொருந்தாது. இதுவே சித்தர் வழியினர் கூறும் கூற்றாகும்” (சாமி சிதம்பரனார் – சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் – பக்.49)

என்ற கூற்றுகளும் சித்தர்களை நாம் உணர உதவுகின்றன.

சித்தர்கள் தம் கொள்கையின் வகைப்பாட்டில் சன்மார்க்க சித்தர், ஞானச் சித்தர், காய சித்தர் என்று வகைப்படுத்தப்படுகின்றனர்.

**குதம்பைச் சித்தர்**

பதினெண் சித்தர்களில் ஒருவராக குதம்பைச் சித்தர் குறிக்கப்படுகின்றார். இவர் இயற்பெயர் மறைந்து இவரது பாடல்களில் அமைந்த ‘குதம்பாய்’ என்பதே பெயராகி குதம்பைச் சித்தர் என வழங்கப்படுகின்றது.

‘குதம்பேய்ச் சித்தர்’ என்று அபிதான சிந்தாமணி கூறுகின்றது. குதம்பை என்பது விளி ஏற்று ‘குதம்பாய்’ என்று ஆகிறது. ஐ, ஆய் என ஆதல் முறை என்பதன்படி தந்தை – தந்தாய் என்றும், அன்னை – அன்னாய் என்றும், குழநதை – குழந்தாய் என்றும் அமைவது போது குதம்பை – குதம்பாய் என்றாயிற்று. ‘குதம்பை’ என்பது மகளிர் காதில் அணியும் ஓர் அணியாகும். இது முதுபெண்டிர்க்குரியதன்று; இளம்பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு உரிய அணி என்பது சிறப்பு.

இவர் குதம்பை அணியினை அணியும் பருவமுடைய குழந்தைகளை விளித்துப பாடினார் என்று சிலர் பொருள் கூறினாலும் உண்மையில் ‘குதப்பும்’ (சொதப்பும்) குழம்பும் என்பதான இயல்புடைய மனதினையே இவர் முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளார் என்று உணர முடிகின்றது. 33 பாடல்கள் கிடைத்துள்ளன.

**குதம்பைச் சித்தர் பேசும் விழிப்புணர்வு சிந்தனைகள்**

சித்தர்கள் வாக்கு பெரும்பாலும் பல்வேறு சூழல்களை மாற்றும் இயல்புடையனவாகத் திகழ்கின்றன.

**சாதி சமயங்களைக் கடந்த நிலை**

சித்தர்கள் சாதி சமயங்களைக் கடந்த பக்தி நிலையினை வழிபாட்டு முறைகளையே வழிப்படுத்தினர்.

“ஆண்சாதி பெண் சாதியாகு மிரு சாதி வீண்சாதி மற்றவெல்லாம்” (அ.எ.137)

என்ற பாடலடிகயினைத் தொடர்ந்து, அதனை நிறுவும் வகையிலான சிந்தனைகளையும்

“ஆதிப் பரம்பிரம்மம் ஆக்கும் அக்காலையில சாதிகள் இல்லையடி” (அ.எ.142)

என்றும்

“கட்டிடிடும் சாதிப்பேர் கட்டுச்சொல் லல்லாமல் தொட்டிடும் வந்தல்லவே” (அ.எ.141)

என்றும் சாதிகள் பிற்காலத்தில் வந்த பிரிவு என்று உணர்த்துவதுடன் இப்படி வேறுபாடு பார்ப்பவர்களுக்கு இறையருளிலும் மாறுபாடு உண்டாகும் என்ற அச்சுறுத்தலை

“சாதிவே றென்றே தரம்பிரிப் போருக்குச்

சோதிவே றாகுமடி” (அ.எ.143)

என்று எடுத்துரைக்கின்றார்.

பாரதி “சாதிகள் இல்லையடி பாப்பா” என்று கூறியதும்

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்” என்று ஔவை நல்வழி (2)யில் சுட்டுகின்றார். எனவே இன்றைய காலத்தின் சாதிய சிக்கல்கள் மேற்சொன்ன வழிமுறைகளைப் பின்பற்றினால் அவற்றைத் தவிர்த்துவிடலாம் என்பதனையும் இப்பாடலடிகளின் செய்திகள் நமக்கும் வலியுறுத்துகின்றன.

**ஆசைகளைத் தவிர்த்தல்**

“ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம்” என்பதுவே புத்தரின் வேதமொழியாகப் போற்றப்படுகின்றது. ஆனால் பல்வேறு ஞானிகளும் யோகிகளும் கூட இதனையேதான் எடுத்துரைத்துள்ளனர். அவ்வகையில் குதம்பைச் சித்தரும் ஆசைதான் பிறப்பினுக்குக் காரணமாக அமைந்தது. ஆசையை ஒழித்தலே உண்மையான துறவாகும். யார் ஒருவர் ஆசையினை முழுமையாக நீக்கி வாழும் இயல்பினை உடையவராக உள்ளாரோ. அவரே முழுமையான செல்வங்களை வாழ்வில் அடைந்த பேறுடையவராக மாறுவார். ஆசையினைத் துறந்தால் பிறவிகள் வராது என்பதான உயர்நிலையிலான சிந்தனைகளை

“இச்சை பிறப்பினை எய்விக்கும்
என்றது நிச்சயம் ஆகுமடி

வல்லமையாகவே வாஞ்சை – ஒழித்திட்டால்
நல்ல துறவாமடி

ஆசை மறுத்தோர்க்கே ஆனந்தம் உண்டு ….

துறவிகள் ஆசை துறந்து விடுவாரேல்

பிறவிகள் இல்லையடி" (அ.எ.114-119)

என்று தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

அன்றைய திரையிசையில்

"ஆசையே அலைபோல நாமெலாம் அதன்மேலே" என்றும், "கையளவு உள்ளத்துல கடளவு ஆசை மச்சான்" என்றும் பல்வேறு பாடல்களை எடுத்துரைக்கின்றன. இவை அனைத்தும் உணர்த்துவதும்

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்"

என்பதான போக்கே ஆகும். இதனைப் பின்பற்றினாலும் நம் வாழ்வு செழிக்கும் என்பதனையே குதம்பைச் சித்தரும் எடுத்துரைக்கின்றார்.

**உடன் வரக்கூடியன**

மனித வாழ்வில் ஆசைகளின் வித்தினுக்கும் பாவ விளைச்சலுக்கும் முக்கியக் காரணம் பல்வேறு விதமான செயல்களில் வென்று அளவற்ற புகழையும் பொருளையும் தம்முடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும என்ற பேரவாதான். அதனால்தான் பலர் அளவற்ற பேராசை கொண்டு பலர் பாவத்தையும் சேர்த்துக கொண்டு பொன்னையும் பொருளையும் சேர்க்கின்றனர். ஆனால் இந்த உலக வாழ்வை நீக்சிச் சொல்லும் போது இவற்றில் எந்தப் பொருளும் கூட வராது. வேறு எவை வரும் என்ற கேள்விக்கு பட்டினத்தார்

"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே".

என்று தெளிவுபடுத்துகின்றார். ஆனால் நாம் செய்த வினைப்பயன்கள் கூட வரும் என்பதனையும் நாம் செய்த நன்மைகளின் ஆசைகளால் எழுந்த விளைவுகள் பயன்தரும் என்றும் உணர வேண்டும்.

**பொய்தவ ஒழுக்கம் முறையற்றது**

மனித வாழ்வின் அடிப்படை நெறி ஒழுக்கத்தினாலேயே அமைந்துள்ளது. அதனை ஒட்டிய வாழ்வியல் முறைகளில், தவநெறியில் வாழ்வதும் ஒரு முக்கிய வாழ்வியலாக சிலருக்கு அமைகின்றது. அதன் பயன் கருதி இச்செயல் மாபெரும் சிறப்பினதாகக் கருதப்படுகின்றது. எனவே இதனை ஒட்டிய தவநெறியாளர்களை முனிவர்கள், யோகிகள், தவசிகள், சித்தர்கள் என்றுப் பலவகையாக நாம் அழைத்து மகிழ்கின்றோம். ஆனால் இக்காலங்களில் ஏதோ சில சுயநலன்களை வளர்க்க விரும்பி பொய்யான ஒழுக்க நெறிகளை உடைய சிலரும் உயர் பண்பாளர்களைப் போல வாழ்வதனை குதம்பைச் சித்தர் எடுத்துரைத்து கேலி செய்து பழித்துரைக்கின்றார்.

தவ நெறியில் செல்பவர் பெண்ணாசை ஒழிக்க வேண்டும். இல்லாதவரை

"வெண்ணீறு பூதியே வீதியில் வந்தோர்க்குப்

பெண்ணசை ஏதுக்கடி" (அ.எ.95)

என்பதும் புறத்தோற்றங்களை மாற்றி வெளிப்பாடு செய்வது மட்டும் போதா. அவை தேவையுமற்றவை. எனவே,

"நாடி மனத்தினை நாதன்பால் வைத்தோர்க்குத்

தாடி சடை யேனோ" (அ.எ.98)

"நாதற்குறவாகி நற்றவம் சார்ந்தோர்க்குப்

பாதக் குறடுமுண்டோ" (அ.எ.99)

என்று தவத்தின் வெளிப்பாடுகள் வேறு தவவேடத்தின் வெளிப்பாடுகள் வேறு என்பதனைச் சுட்டிக்காட்டி எடுத்துணர்த்துகின்றார். இன்றைய காலங்களில் இத்தகைய கபடதாரிகள் மிகுதியானதையும் நாம் அறிகின்றோம்.

**மயக்கும் மாதரைப் பழித்திடுதல்**

பெண்களை அன்பு, தியாகம், கருணை என்பதாய் ஒரு பக்கம் உயர்த்திப் பேசப்படும் சூழல் நிலவினாலும், இன்னொரு புறம் எதிர்நிலையில் பார்த்தல் அனுபவித்தல் என்பதான சூழலையும் உடையதான உலகியல் இது. அவ்வகையில் போற்றி உரைத்தலைக் கடந்து பல்வேறு சமயச் சான்றோர்களும் ஞானிகளும் யோகிலும் வரிசையில் சித்தர்கள் சிலரும் சில பெண்களை தூற்றும் வகையிலும் அவர்களிடமிருநது ஆடவர் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய சூழலையும் எடுத்துரைக்கின்றனர்.

அவ்வகையில் குதம்பைச் சித்தர்,

"நெடுவரை போலவே நீண்ட கனதனம் நடுவாக வந்ததி

கையாலழைப்பது போல வுனதுகண் மையால் அழைப்பதென்னை

முதிர்ந்த சுடுகாட்டில் முல்லையை ஒத்தபல் உதிர்ந்து கிடக்குமடி…" (அ.எ.71-82)

என்று பல்வேறு நிலையில் எடுத்துரைத்து மயக்கும் பெண்கள் என்று பேசுவது குலமகள் அல்லாத இயல்படைய பெண்டிரை மட்டுமே சுட்டும் என்பது சுத்தர்கள் மொழிக்குரியதான செய்தியாக பார்க்கப்படுகின்றது.

"சேலைகட்டிய மாதரை நம்ப வேண்டாம்" (வி.சிந்-89)

என்ற பாடலடிகள் விவேகசிந்தாமணியில் உள்ளது.

கண்களை விரித்து அலையவிட்டுப் பார்க்கும் தன்மையுடையது பெண்மையின் குணம் அல்ல; அத்தகைய இயல்புடைய பெண்மை விரும்பத்தக்க முறையன்று. எனவே அவர்களைத் தவிர்க்க வேண்டும் என ஆண்களுக்கும்; இப்படி செயல்படக் கூடாது என அந்தப் பெண்களுக்கும் எடுத்துரைப்பதாக இச்செய்தி அமைந்துள்ளது.

**நிறைவுரை**

குதம்பைச் சித்தர் இளம் பெண்களை முன்வைத்துக் கூறுவதான முறையில் கூறிய அறியாமை அகற்றல் அறிவுநிலை அறிதல் கடவுள் திறன் கூறல், உடலைப் பழித்தல், வீடுபேறு அடையும் வழியினைக் கூறுக நிலையாமை உணர்த்தல் போன்ற பலவற்றை இச்சமூக நலன் கருதி எடுத்துரைத்துள்ளார் அவற்றும் ஒரு சில மட்டுமே இங்கு வழங்கப்பட்டது. அறிந்துகொள்ள கடல்போல் செய்திகள் உள்ளன; உணர்வோம் – உணத்துவோம்.

**உதவிய நூல்கள்**


1. குதம்பைச் சித்தர் பாடல்கள் – கழக வெளியீடு
2. சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் – சாமி சிதம்பரனார்.
3. தமிழ் இந்தியா – ந.சி. கந்தையாப் பிள்ளை
4. திருமந்திர ஆராய்ச்சி – இரா. மாணிக்கவாசகம்
5. நல்வழி - ஔவையார்
6. விவேகசிந்தாமணி – ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம், சென்னை-1